22.06.2026

OS. No.**379/2025**

**வா.சா.1 –** திரு.கருணாநிதி த/பெ.தங்கவேல்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

தாப்பாய் கிராமம் சர்வே எண்.409/ 9A 2001 ஆம் வருடம் நடைபெற்ற பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தில் என் சார்பாக முருகேசன் மற்றும் சாந்தி ஆகியோர்கள் குத்தகை சாகுபடி செய்கிறார்கள் என்றால் குத்தகைக்கு இல்லை. வெள்ளனூர் கிராமம் சர்வே எண். 29/1A2 –ல் 1 ஏக்கர் 60 சென்ட் ஆளுக்கு பாதியாகப் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை 22.07.2010 –ல் ரூ.58,000/–க்கு கோவிந்தராஜன் மகன் ராமராஜ் என்பவருக்கு நான் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். 30.04.2023 –ல் முதல் பிரதிவாதி அவரது பாதிபாகத்தை காயத்ரி என்பவருக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாப்பாய் கிராமம் சர்வே எண்.489/ 2A –ல் கண்ட 7 சென்ட் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் ஏழு சென்ட் கிடையாது. நான் தாக்கல் செய்த வழக்குரையில் சர்வே எண். 489/2A, 489/1, 483/1 குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால் சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மதிப்பீட்டு பட்டியலிலும் அந்த சொத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1996, 2000 மற்றும் 2001 –ல் எழுதப்பட்ட பாக பிரிவினை ஆவணங்களில் என் அப்பாவும் அம்மாவும் கையொப்பம் செய்தார்கள். நானும் இருந்து அதில் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. சர்வே எண். 64/6 –ல் 33 சென்ட் என் அண்ணன் எனக்கு பணம் வாங்காமல் கிரையம் செய்து கொடுத்ததை அவரது மனைவிக்கு தவறுதலாக தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருக்கிறார் என்றால்

அதன் காரணமாக நான் லால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.210/2021 எனத் தாக்கல் செய்து அதில் வருகை இல்லா தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வழக்கை அந்த ஒரு குறிப்பிட்ட சர்வே எண் தொடர்பாக மட்டும் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் மற்ற சொத்துக்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மூன்று பாகப்பிரிவினையிலும் இருந்தேன் என்றும், இருந்து தெரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன் என்றும், அதை தற்போது நீதிமன்றத்தில் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த மூன்று பாகப்பிரிவினைகளிலும் அவரவர் பாகத்திற்கு கிடைத்த சொத்துகளை அவரவர் அடைந்து விற்பனை செய்தும் அனுபவம் செய்தும் வருகிறோம் என்றும் அதற்கு மாறாக நான் தாக்கல் செய்திருக்க வழக்கில் நான் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கத் தக்கதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

( ஒம்.), XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.